**ஆகஸ்ட் – 14**

# TNPSC துளிகள்

- 11 டன் அளவிலான ஆப்பிள்கள் மற்றும் பேரிக்காய்கள் புனே வேளாண் விளைபொருள் சந்தைக் குழுவை (APMC) அடைந்ததையடுத்து, ஜம்மு காஷ்மீர் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை eNAM வழியாக அவற்றின் முதலாவது மாநிலங்களுக்கு இடையேயான வேளாண் வர்த்தகத்தினை நிறைவு செய்தன.
- 'Why the Constitution Matters' என்ற புத்தகத்தினை முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி (CJI) தனஞ்சய Y. சந்திரசூட் எழுதியுள்ளார்.
- DSP மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனமானது, இந்தியாவின் முதல் ஃப்ளெக்ஸி கேப் குறியீட்டு நிதியான DSP Nifty500 ஃப்ளெக்ஸி கேப் தரம் 30 என்ற குறியீட்டு நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதத்தைக் கௌரவிக்கும் வகையில், விஸ்வ-சமஸ்கிருத-தினம் என்றும் அழைக்கப்படும் உலக சமஸ்கிருத தினமானது ஆண்டுதோறும் ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- ஆதார் முக அங்கீகாரம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சாதனை அளவாக 19.36 கோடி பரிவர்த்தனைகளை எட்டியது.
  - மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின்படி, 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பதிவான 5.77 கோடி என்ற எண்ணிக்கையில் இருந்து இது மூன்று மடங்கு உயர்வைக் குறிக்கிறது.

# தேசியச் செய்திகள்


## PMGSY குறித்த நிலைக்குழு அறிக்கை

- கிராமப்புற இணைப்பை மேம்படுத்துவதற்காக, பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா (PMGSY) என்ற திட்டமானது மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாக 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலைக்குழு தனது 17வது அறிக்கையை மக்களவையில் சமர்ப்பித்தது.
- PMGSY திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட சாலைகளின் தரம் மற்றும் செயல்படுத்தல் குறித்த கடுமையான சிக்கல்களை இந்த அறிக்கை எடுத்துக் காட்டியது.
- உள்ளூர் நிலப்பரப்பு மற்றும் போக்குவரத்துத் தேவைகளுக்கு ஏற்ப சாலை வடிவமைப்புகள் மற்றும் அகலங்களை மாநில அரசுகள் சரி செய்ய அனுமதிப்பதற்காக சாலைக் கட்டுமான விதிமுறைகளை தளர்த்த இந்த அறிக்கை பரிந்துரைத்தது.
- இந்திய ஒருங்கிணைந்த நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் கூடுதலாக 100 கி.மீ கிராமப்புறச் சாலைகளை அமைக்க இந்த அறிக்கை முன்மொழிந்தது.
- சமீபத்திய மக்கள்தொகை தரவுகளைப் பயன்படுத்தி PMGSY-IV சாலை

ஆய்வுகளைப் புதுப்பிக்கவும், சாலைத் தேர்வு மற்றும் ஒப்புதலுக்கு உள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிப்பதை கட்டாயமாக்கவும் இந்த குழு அழைப்பு விடுத்தது.




## MERITE திட்டம்





- இந்தியா முழுவதும் உள்ள 275 தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய MERITE திட்டத்தினை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- MERITE என்பது தொழில்நுட்பக் கல்வியில் பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து

ஆண்டுகளில் 175 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 100 பல்தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பலன் வழங்கப்படும்.

- இந்தத் திட்டமானது, 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப தரம், சமத்துவம் மற்றும் நிர்வாகத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வேலைவாய்ப்பு ஆராய்ச்சி, புத்தாக்கம், எண்ணிமமயமாக்கல் மற்றும் கல்வித் தலைமைத்துவத்தில் பெண் ஆசிரியர்களுக்கான ஆதரவு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி சபை மற்றும் தேசிய அங்கீகார வாரியம் போன்ற நிறுவனங்கள் இதன் அமல்படுத்தலுக்கான ஆதரவினை வழங்கும்.

## PM E-Drive திட்ட நீட்டிப்பு

- இந்திய அரசாங்கமானது, PM E-Drive திட்டத்தினை (புத்தாக்கம் மிக்க வாகன மேம்பாட்டில் பிரதான் மந்திரி மின்சார வாகன இயக்கங்களுக்கான புரட்சி) 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
- இந்தத் திட்டமானது, மின்சாரப் பேருந்துகள், ஆம்புலன்ஸ் மற்றும் சரக்குந்துகளை தூய்மையான எரிபொருள் சார்ந்த வாகன இயக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஊக்கத் தொகையை வழங்குகிறது.
- மின்சார இரு சக்கர வாகனங்கள், மின்சார ரிக்ஷாக்கள் மற்றும் மின்சார மூன்று சக்கர வண்டிகளுக்கான சலுகைகள் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடைய உள்ளன.
- இந்தத் திட்டமானது, மின்சார சரக்குந்துப் பயன்பாடுகளுக்கு மாறுவதற்காக நாடு முழுவதும் சுமார் 5600 சரக்குந்துகளை இலக்காகக் கொண்டு 9.6 லட்சம் ரூபாய் வரையிலான ஊக்கத்தொகையை வழங்குகிறது.





## GeM அமைப்பின் 9வது நிறுவன தினம்

- அரசாங்க மின் சந்தை (GeM) ஆனது, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று

அதன் 9வது நிறுவன தினத்தைப் புது டெல்லியில் கொண்டாடியது.

- 2024 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான நிதியாண்டில் GeM சந்தையில் மொத்த வணிக மதிப்பு (GMV) 5.4 லட்சம் கோடி ரூபாயாகப் பதிவானது.
- GeM ஆனது, வெளிப்படையான மற்றும் திறம் மிக்க பொது கொள்முதலுக்கான டிஜிட்டல் தளமாக 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ஒன்பது ஆண்டுகளில், பெண்கள் தலைமையிலான நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் (SHGs), கைவினைஞர்கள் மற்றும் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் (MSEs) ஆகியவற்றில் 1.5 லட்சம் பேர் GeM உடன் இணைந்தனர்.
- 2025 ஆம் ஆண்டு கொண்டாட்டம் ஆனது, 'Ease Access and Inclusion' என்ற கருத்துருவில் நடத்தப் பட்டது.
- GeM ஆனது மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பு செயல்முறை ஆதரவை வழங்குகிறது.




## CATCH திட்டம்

- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது புற்றுநோய் AI மற்றும் தொழில்நுட்பம் என்ற சவாலை (CATCH) அறிமுகப்படுத்தியது.
- CATCH என்பது தேசியப் புற்றுநோய் கட்டமைப்புடன் (NCG) இணைந்து, IndiaAI திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் கூட்டுப் புத்தாக்க நிதி வழங்கீட்டுத் திட்டமாகும்.
- இந்தியா முழுவதும் புற்றுநோய் பரிசோதனை, நோயறிதல், சிகிச்சை மற்றும் நோயாளிப் பராமரிப்பு ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவின் (AI) சரிபார்ப்பு மற்றும் பயன்பாட்டை விரைவுபடுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- நோயின் ஆரம்ப கட்ட கண்டறிதல், மருத்துவம் சார்ந்த முடிவெடுத்தல், நோயாளிகளுடனான மருத்துவ ஈடுபாடு, ஆராய்ச்சி, மருத்துவமனை செயல்பாடுகள் மற்றும் தரவு மேலாண்மை ஆகியவற்றிற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்தத் தீர்வுகளை CATCH ஆதரிக்கும்.
- இந்த முன்னெடுப்பானது, இந்தியாவின் அதிகரித்து வரும் புற்றுநோய் பாதிப்பு மற்றும்

சரியான நேரத்தில் நோயறிதல் மற்றும் பராமரிப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகலை நிவர்த்தி செய்கிறது.




## Work for Viksit Bharat வலை தளம்

- நிதி ஆயோக் அமைப்பானது, அரசுத் திட்டங்களுக்கு நிபுணர்களை பணி அமர்த்துதற்காக Work for Viksit Bharat எனும் வலைதளத்தினைத் தொடங்கியது.
- முதுகலை அல்லது பொறியியல் பட்டம் பெற்ற 32 வயது வரையிலான இளம் தொழில் வல்லுநர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.
- 8 முதல் 15 ஆண்டுகள் அனுபவமுள்ள 50 வயது வரையிலான மூத்த ஆலோசகர்களும் விண்ணப்பிக்கலாம்.
- இந்த வலை தளமானது வேளாண்மை, கல்வி, சுகாதாரம், எரிசக்தி மற்றும் சுற்றுச் சூழல் போன்ற பல துறைகளை உள்ளடக்கியது.




# சர்வதேசச் செய்திகள்


## SheLeads II திட்டம்

- ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பெண்கள் அமைப்பானது SheLeads திட்டத்தின் இரண்டாவது பதிப்பானது புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- பெண்களின் பொது மற்றும் அரசியல் தலைமைத்துவத் திறனை வளர்ப்பதற்காக ஐ.நா. பெண்கள் அமைப்பின் இந்திய அலுவலகம் இந்தப் பயிலரங்கினை ஏற்பாடு செய்கிறது.

- மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டைக் கட்டாயமாக்கும் 2023 ஆம் ஆண்டு மகளிர் இடஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த திட்டம் தொடங்கப்பட்டது.
- எதிர்கால தேசிய மற்றும் மாநிலத் தேர்தல்களில் போட்டியிடவும், நிர்வாகத்தில் பாலினச் சமத்துவத்தை வலுப்படுத்தவும், பெண்களை திறன்கள் மற்றும் வலையமைப்புகளுடன் சித்தப்படுத்துவதே SheLeads திட்டத்தின் நோக்கமாகும்.





## 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய நெகிழி உற்பத்தி




- யூனோமியா மற்றும் சூழி அளவிலான கார்பன் உமிழ்வுப் பகுப்பாய்வு அமைப்பு நடத்திய ஆய்வில், உலகின் ஏழு நாடுகள் 2024 ஆம் ஆண்டில் அதிகம் பயன்படுத்தப் படும் நெகிழிகளில் மூன்றில் இரண்டு பங்கை உற்பத்தி செய்ததாகக் குறிப்பிடுகிறது.
- பாலிஎத்திலீன், பாலிப்ரொப்பிலீன், பாலிஎத்திலீன் டெரெப்தாலேட் மற்றும் பாலிஸ்டிரீன் ஆகியவற்றின் உலகளாவிய உற்பத்தியில் சீனா மட்டும் 34 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இந்த உற்பத்தியானது அடுத்த ஆறு அதிக நெகிழி உற்பத்தி செய்யும் நாடுகளின் மொத்த அளவிற்குச் சமமாகும்.
- அதனைத் தொடர்ந்து 13 சதவீதத்துடன் அமெரிக்காவும், தலா 5 சதவீதப் பங்களிப்புடன் சவுதி அரேபியா மற்றும் தென் கொரியா ஆகியவையும் உள்ளன.
- மொத்த உற்பத்தியில் இந்தியா 4 சதவீதம், ஜப்பான் 3 சதவீதம், ஜெர்மனி 2 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.
- சீனாவின் அரசுக்கு சொந்தமான சினோபெக் நிறுவனம் மொத்த உற்பத்தியில் 5.4 சதவீதத்துடன் உலகின் முன்னணி நெகிழி உற்பத்தியாளராக இருந்தது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிரேட் பேரியர் பவளப் பாறை இழப்பு





- 39 ஆண்டுகளுக்கு முன்பு கண்காணிப்பு தொடங்கியதிலிருந்து கிரேட் பேரியர் (Great Barrier) பவளப் பாறையானது அதன் அதிகபட்ச வருடாந்திர உயிருள்ள பவள இழப்பைப் பதிவு செய்து உள்ளது.
- பருவநிலை மாற்றம் தொடர்பான வெப்ப அழுத்தத்தால் 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு பெரிய வெளிர்தல் நிகழ்வைத் தொடர்ந்து இந்த பவளப் பாறை இழப்பு ஏற்பட்டது.
- இந்த இழப்பு இருந்தபோதிலும், 2017 ஆம் ஆண்டு முதல், வளர்ச்சி காரணமாக மொத்த பவளப்பாறைப் பரவல் நீண்ட கால சராசரி அளவிற்கு அருகிலேயே உள்ளது.
- இந்தப் பவளப் பாறை அமைப்பு ஆனது, ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு கடற்கரையில் இருந்து 344000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்தப் பவளப் பாறையில், 2024 ஆம் ஆண்டில் தெற்கில் சுமார் மூன்றில் ஒரு பங்கு பவளப்பாறை இழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- வடக்குப் பகுதியானது அதன் பவளப்பாறைகளில் கால் பகுதியை இழந்தது, மத்தியப் பகுதி 14 சதவீதம் இழந்தது.
- 2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான உலகளாவிய வெப்ப அலையானது, நான்காவது மற்றும் மிக மோசமான உலகளாவிய பவளப்பாறை வெளிர்தல் நிகழ்வுக்கு வழிவகுத்தது.
- இந்தப் பவளப் பாறை உட்பட உலகின் பவளப்பாறைப் பகுதிகளில் சுமார் 84 சதவீதத்தை வெப்ப அழுத்தம் பாதித்தது.
- நீடித்த அதிக வெப்பநிலையானது, பவளப்பாறைகள் பாசிகளை அகற்றி, அதனை வெண்மையாக மாற்றும் போது பவளப்பாறை வெளிர்தல் ஏற்படுகிறது.

## கடல் நட்சத்திர மீன் அழிவு நோய்

- விப்ரியோ பெக்டெனிசிடா என்ற பாக்டீரியாவானது கடல் நட்சத்திர மீன் அழிவு நோய்க்குக் காரணம் என்று அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த நோய் ஆனது, வட அமெரிக்காவின் பசிபிக் கடற்கரையில் பத்தாண்டுகளுக்கும் மேலாக பில்லியன் கணக்கான கடல் நட்சத்திர மீன்களைக் கொன்றுள்ளது.
- இந்த நோய் சூரியகாந்தி வடிவ கடல் நட்சத்திர மீன் உட்பட 20க்கும் மேற்பட்ட உயிரினங்களைப் பாதித்தது. 2013 ஆம் ஆண்டில் தொடங்கி, ஐந்து ஆண்டுகளுக்குள் சூரியகாந்தி வடிவ கடல் நட்சத்திர மீன்களின் எண்ணிக்கை 90 சதவீதம் குறைந்து உள்ளது.
- இந்த நோயால் பாதிக்கப்பட்ட கடல் நட்சத்திர மீன்களின் உடலில் புண்கள் உருவாகி அவற்றின் கைகள் உதிர்ந்து, அவை உயிரிழக்கின்றன.
- கடல் நட்சத்திர மீன்கள் ஆனது மீன்கள், கடல் கீரிகள் மற்றும் நீர் நாய்களுக்கு வாழ்விடத்தினை வழங்கும் கெல்ப் காடு சுற்றுச்சூழல் அமைப்புகளில் முக்கியமாகக் காணப்படும் வேட்டையாடும் இனமாகும்.





## கலிலேயா கடல் நிற மாற்றம்




- போட்ரியோகோகஸ் பிரவுனி எனப்படும் பச்சை ஆல்கா (பாசி) இனம் காரணமாக இஸ்ரேலில் உள்ள கலிலேயா கடல் சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

- இந்த ஆல்கா சூரிய ஒளியில் ஒரு சிவப்பு நிறமியை உருவாக்குகிறது என்பதோடு இது தண்ணீரில் குவிந்து, நிற மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
- பாசி பெருகும் நிகழ்வானது, அதிகரித்து வரும் உலகளாவிய வெப்பநிலை மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் ஊட்டச்சத்து குவிப்புடன் தொடர்புடையது.
- இது மனிதர்களுக்குப் பாதிப்பில்லாதது என்றாலும், இந்தப் பாசிப் பெருகல் சூரிய ஒளியைத் தடுப்பதன் மூலமும் நீரில் ஆக்ஸிஜன் அளவைக் குறைப்பதன் மூலமும் நீர் வாழ் உயிரினங்களைத் தொந்தரவு செய்யலாம்.
- நீரின் நிறம் சிவப்பாக மாறுகின்ற இதே போன்ற நிகழ்வுகள் 2022 ஆம் ஆண்டில் இஸ்ரேலின் சவக்கடல் பகுதியில், அதே ஆல்கா இனங்கள் காரணமாக ஏற்பட்டன.

## அட்மிராண்டஸ் ஒடிஷாயென்சிஸ்




- ஆராய்ச்சியாளர்கள் சிலிகா ஏரியில் ஒரு புதிய கடல் உருளைப் புழு இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த இனமானது, ஒடிசாவில் கண்டுபிடிக்கப் பட்டதனால் அட்மிராண்டஸ் ஒடிஷாயென்சிஸ் என்று பெயரிடப்பட்டது.
- அட்மிராண்டஸ் ஒடிஷாயென்சிஸ் வடக்கு இந்தியப் பெருங்கடலில் முதன்முதலில் பதிவான அட்மிராண்டஸ் இனத்தைச் சேர்ந்தது.
- இந்த இனமானது முன்னதாக ஆப்பிரிக்காவிற்கு அருகில் இந்தியப் பெருங்கடலில் மட்டுமே கண்டறியறியப்பட்டது.
- கடல் நூற்புழுக்கள் சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கான எதிர்வினைகளை காட்டும் என்பதால், சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தின் உயிரியல் குறிகாட்டிகளாக செயல் படுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஈகுவேட்டர் பரிசு 2025

- ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது (UNDP) 2025 ஆம் ஆண்டு ஈகுவேட்டர் பரிசினை வென்ற பத்து வெற்றியாளர்களை அறிவித்தது.
- நீடித்த நிலையான மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மீள்தன்மையை ஆதரிக்கும் பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர்ச் சமூகங்களின் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளை இந்த விருது கௌரவிக்கிறது.
- பெண்கள் மற்றும் இளையோர்கள் தலைமையை மையமாகக் கொண்ட, பருவநிலை

நடவடிக்கைக்கான இயற்கை என்ற கருத்துருவின் கீழ் வெற்றியாளர்கள் இதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

- இந்த விருதினைப் பெற்ற ஒரே இந்திய அமைப்பு கர்நாடகாவைச் சேர்ந்த பிபிஃபாத்திமா ஸ்வ சஹாய சங்கம் மட்டுமே ஆகும்.
- இது சிறு தானிய வேளாண் விதை வங்கிகள் மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் செயலாக்கம் மூலம் 5000 விவசாயிகளுக்கு ஆதரவளிக்கிறது.
- மற்ற வெற்றியாளர்கள் அர்ஜென்டினா, பிரேசில், ஈக்வடார், இந்தோனேசியா, கென்யா, பப்புவா நியூ கினியா, பெரு மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமூகம் தலைமையிலான பருவநிலை மற்றும் பல்லுயிர்ப் பெருக்க நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்ற அமைப்புகள் ஆகும்.




## முக்கிய தினங்கள்

### உலக சிங்க தினம் 2025 - ஆகஸ்ட் 10



- வேகமாக குறைந்து வரும் சிங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்கான அவசரத் தேவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- சிங்கங்கள் (பாந்தெரா லியோ) மிகவும் சமூக ஈடுபாடு கொண்ட பெரும் பூனை இனமாகும், அவை முதன்மையாக ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் காணப் படுகின்றன.
- ஆசிய சிங்கம் (பாந்தெரா லியோ பெர்சிகா) ஆப்பிரிக்க சிங்கத்தை விட சற்று சிறியது ஆகும்.
- 16வது சிங்கங்கள் கணக்கெடுப்பின்படி (2025) 2015 ஆம் ஆண்டில் 523 ஆக இருந்த ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையானது 2025 ஆம் ஆண்டில் 891 ஆக அதிகரித்தது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஆசியச் சிங்கங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று சிங்கங்களின் வளங்காப்பு திட்டம் தொடங்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★